1979 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அறிவித்தது போல கிலோ ரூ. 2–25 இந்த சூரியகாந்தி விதை விலை. ஒரு ஏக்கரிலே 400 கிலோ சூரிய காந்தி விதை பயிராகும் என்று குறிப்பு வேளாண்மைத் துறையிலே இன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 400 கிலோ மூலம் ரூ. 900 கிடைக்கும். ஒரு ஏக்கர் இதற்குப் பயிரிட ரூ. 400 செலவாகும். ஆகவே, ரூ. 500 மூன்று மாதங்களில் ஒரு ஏக்கருக்கு கிடைக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் கட்டுப்படியாகவில்லை என்ற நிலை இல்லை. அப்படி இருந்து, கொண்டு வந்தால், கண்டிப்பாக அதைப்பற்றி கவனிப்போம்.

திரு. என். பழனிவேல் : சூரிய காந்திப் பயிர் நமது மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை ஏக்கர் பயிரிடப்படுகிறது? சூரியகாந்தி விதையை அரசே கொள்முதல் செய்து கொடுக்க முன்வருமா? அந்த எண்ணெய் என்னென்ன காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவேயே சொன்ன பதில்களில் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கு விடை இருக்கிறது. அவர்கள் அதையே திரும்பப் படித்துப் பார்த்தால் கண்டிப்பாக விடை கிடைக்கும்.

பாளையங்கோட்டை மருத்துவ மனைக்கட்டிடம்.

*வினா. எண். 698— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சிதம்பரம் வட்டம் கீரபாளையம் ஒன்றியம் பாளையங்கோட்டையில் புதிய மருத்துவமனை கட்டுவதற்கு நிலம் வாங்கப்பட்டும் இதுநாள்வரை மருத்துவமனை கட்டப்படாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) இம் மருந்தகம் காலியாயிருந்த மருத்துவ அலுவலர் குடியிருப்பிற்கு மாற்றப்பட்டு தற்போது இயங்கி வருவதால் அரசின் நிதி நிலைமைகளுக்கேற்ப பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்.

உள்ளாட்சி மருந்தகங்களுக்கு நிதி உதவி.

* வினா எண். 699—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன்கள் நடத்தும் மருந்தகங்களுக்கு மருந்துகள் வாங்குவதற்காகும் செலவு தொகையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: நகராட்சி மன்றங்கள் மற்றும் பஞ்சாயத்து ஒன்றியங்கள் நடத்தும் மருந்தகங்களுக்கு மருந்துகள் வாங்வதற்காகும் செலவுத் தொகையை அதிகப்படுத்தி அரசு உத்திரவு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:—

பகுதிநேர மருந்தகம் மருந்துச் செலவு ஒருவருடத்திற்கு ரூ. 2,500-லிருந்து ரூ. 5,000 மாக அதிகப்படுத்தப் பட்டுள்ளது. முழுநேர மருந்தகத்திற்கு மருந்துச் செலவு ஒரு வருடத்திற்கு, ரூ. 5,000 லிருந்து ரூ. 10,000 மாக அதிகப்படுத்தப்பட்டுள்ளது. தேவையான பண ஒதுக்கீடு செய்வதும் அவற்றிற்கான மருந்து வகையராக்களை வாங்குவதும் அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்களின் பொறுப்பாகும்.

திரு. தி. அன்பழகன்: இந்த ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படும் மருந்தகங்களில் மருந்து இல்லாத குறை பெரிய குறையாக இருக்கிறது. இதுபோன்ற மருத்துவ மனைகளை அரசு மருத்துவ மனையாக மாற்றும் எண்ணம் அரசுக்கு ண்டா?